DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 119/2019** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : திரு.மாரியப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 07 July 2026.

எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவிட்டேன். இதற்கு முன்பு சின்னகோவிலாகுளம் காவல்நிலையத்தில் பணிபுரிந்த தலைமைக்காவலர் ராஜேந்திரன் என்பவரின் கையெழுத்து நன்கு எனக்கு தெரியும். அவர் இறந்துவிட்டதால் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.12.2016–ம் தேதி தலைமைக்காவலர் ராஜேந்திரன் அவர்கள் காவல் நிலையப்பொருப்பில் இருந்த போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில்

இருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த உக்கிரன்கோட்டை மொட்டையனூர், தெற்கு தெருவை சேர்ந்த மாடசாமி மகன் கண்ணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து அன்றையதினமே 21.00 மணிக்கு அதன்தன்மைக்கேற்ப குற்ற எண். 166/2016-ல் 294(பி), 342, 324, 506(ii) IPC-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர் அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளரான என் பார்வைக்கு வைத்தார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் அடிப்படையில் நான் கடந்த 29.12.2016-ம் தேதி 6.00 மணிக்கு சாட்சிகள் சுதாகர் மற்றும் இன்பக்கனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சுதாகர், இன்பக்கனி, கண்ணன், கனகாம்பால் , மாடசாமி, மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த தலைமைக்காவலர் ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி சாட்சிகளின் அடிப்படையில் ஏற்கனவேபதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 294(பி), 342, 324, 506(ii) IPC என்பதை 294(பி), 323, 324, 506(ii) IPC-ன் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தற்கு அனுப்பி வைத்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.** மேற்படி வழக்கின் விசாரணையை உதவி ஆய்வாளர் அந்தோணி சபரிமுத்து என்பவரின் மேற்பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் அந்தோணி சபரிமுத்து என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

அ.சா.1க்கு ஏற்பட்ட சம்பவம் மதியம் 1.30 மணிக்கு என்று என் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1–யை சதிஷ் என்பவர் கத்தியைக் கொண்டு இடது கை, இடது கால், வலது கால், முதுகின் பின்புறத்தில் அடித்தாக என் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1–யை அந்த பகுதியில் இருந்தவர்கள் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்பது என் விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. மேற்படி சம்பவயிடத்தில் ஈஸ்வரன், துரைராஜ், சண்முகையா ஆகியோர்களை வழக்கில் சாட்சியாக விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.1–யை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றவர்கள் இந்தவழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் தலைமைக்காவலர் கையெழுத்து எனக்கு தெரியும் என்று சொல்வது உன்மையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சட்டபிரிவுகள் மாற்றி அமைத்து தாக்கல் செய்தேன் என்று கூறுவது உன்மையல்ல என்றால் சரியல்ல. இந்தவழக்கின் விசாரணை அதிகாரி வழக்கு சம்பவத்தில் கூறப்பட்டுள்ள கத்தியை சான்று பொருளாக கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவத்தில் விசாரணை அதிகாரி சபரிமுத்து என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் அ.சா.1–யிடம் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த

வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் எதிரியை கைது செய்வதாக சொல்வது உன்னையல்ல என்றால் சரியல்ல. அ.சா.1–க்கு எதிரிகளால் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.